# கைவிடப்பட்ட திருநங்கைகளுக்கான இல்லங்கள்!

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஏப்.4-

“விளிம்பு நிலை மனிதர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுத் ( SMILE Support for Marginalized Individuals for Livelihood and Enterprise) திட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட திருநங்கைகளுக்கு 'கரிமா கிரஹ்' என்ற பெயரில் இல்லம் கட்டித் தர முடிவு செய்யப்பட்டது, அதன் அடிப்படையில் திருநங்கைகளுக்கான இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கிறதா?



இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இப்போது வரை திருநங்கைகளுக்கான இல்லங்கள் எத்தனை அமைக்கப்பட்டன? மாநில வாரியான விவரங்கள் என்ன? திட்டத்தை செயல்படுத்தவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன?

அமைக்கப்பட்ட இல்லங்களில் வசிக்கும் திருநங்கைகளின் எண்ணிக்கை எத்தனை? அங்கு வழங்கப்படும் வசதிகள் பற்றிய விவரங்கள்?

கரிமா கிரஹ் இல்லங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? இதுவரை பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு?

இல்லத்தில் தங்கியுள்ளவர்களின் மன நலம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்ய ஏதேனும் கூடுதல் வழிமுறை வழங்கப்பட்டுள்ளதா?

அவர்களுக்கு வாழ்வாதார முன்னேற்றம் அளிக்கும் வகையில் மாவட்ட வாரியாக விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்ய அமைச்சகம் ஏதேனும் திட்டம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?” ஆகிய கேள்விகளை திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் பி.எல்.வர்மா அளித்த பதிலில்,

“கரிமா கிரஹ் என்ற இல்லங்கள், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையால் 'திருநங்கைகளின் நலனுக்கான விரிவான மறுவாழ்வுக்கான மத்திய துறை திட்டம்' என்ற துணைத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் 15 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 18 இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகாராஷ்டிராவில் 3, மேற்கு வங்காளத்தில் 2 இல்லங்களும் மற்ற மாநிலங்களில் 1 இல்லமும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 429 திருநங்கைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் ஒரு கிரிமா கிரஹ் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 20 திருநங்கைகள் தங்கியுள்ளனர்.

தேவைப்படும் திருநங்கைகளுக்கு தங்குமிடம் தவிர, உணவு, மருத்துவ பராமரிப்பு, யோகா, தியானம் மற்றும் விளையாட்டுகள், நூலக சேவைகள், பொழுதுபோக்குகளைத் தொடர வாய்ப்பு போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் இந்த இல்லங்களில் வழங்கப்படுகின்றன.

இதுவரை, ஸ்மைல் திட்டத்தின் கீழ் இந்த இல்லங்களுக்காக ரூ.6.8 கோடி விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இல்லங்களில் வசிக்கும் திருநங்கைகளுக்கு மனநலம் தொடர்பான கவுன்சிலிங் அமைக்க ஒவ்வொரு இல்லத்துக்கும் ஒரு மனநல ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் அளிக்கும் Tele MANAS என்ற திட்டம், ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை மூலம் 2022 அக்டோபரில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், திருநங்கைகள் உட்பட தேவைப்படும் நபர்களுக்கு உளவியல் ஆதரவு மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்க 24 மணி நேர உதவி எண் (14416) அமைக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு, யூனியன் பிரதேச அரசுகள் மூலமாக SMILE திட்டம் பற்றி திருநங்கைகள் சமூகத்தினரிடையே விளம்பரங்களும் விழிப்புணர்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது” என்று தெரிவித்துள்ளார்.

---

தமிழ்நாட்டில் கடந்த 6 ஆண்டுகளில் பெரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ்

# பொதுத் துறை நிறுவனங்கள் மேற்கொண்ட பணி விவரங்கள் என்ன?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஏப். 4 -

“தமிழ்நாட்டில் கடந்த ஆறு ஆண்டுகளில் பெரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் பொதுப் பணித் துறை நிறுவனங்கள் மேற்கொண்ட பணி விவரங்கள் என்ன?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

கடந்த 6 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் CSR திட்டங்களுக்கு பொதுத்துறை அல்லாத நிறுவனங்கள் செலவு செய்துள்ளன நிதி விபரம் குறித்து, மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்வியும், அதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:

கேள்வி : தமிழ்நாட்டில், குறிப்பாக தென்சென்னை தொகுதியில், கடந்த 6 ஆண்டுகளில் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மேற்கொண்ட பணிகளின் விவரங்கள் பற்றியும், அது தொடர்பாக மேலும் சில விவரங்கள் பற்றியும் விவரம் என்ன?

இவ்வாறு அவர் எழுப்பிய கேள்விக்கு பெருநிறுவனங்கள் விவகாரங்கள்துறை இணை அமைச்ணர் ஹர்ஷ் மல்கோத்ரா அளித்துள்ள பதில் வருமாறு:-

பெருநிறுவனங்கள் எம்சிஏ 21 என்ற பதிவேட்டில் ஆண்டுதோறும் சிஎஸ்ஆர் செயல்பாடுகளின் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும். MCA21 பதிவேட்டில் நிறுவனங்கள் செய்த தாக்கல்களின் அடிப்படையில், கடந்த 6 நிதியாண்டு களில் அதாவது 2017-2018 முதல் 2022-2023 வரை தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள் ரூ. 573.42 கோடியை வேளாண் நடவடிக்கை, கல்வி, சுகாதாரம், குடிநீர், சுற்றுச்சூழல் பராமரிப்பு, பெண்கள் மேம்பாடு போன்றவற்றுக்காக செலவு செய்துள்ளன. தனியார் நிறுவனங்கள் ரூ.6210.36 கோடி செலவழித்து உள்ளன. இது தொடர்பாக மாவட்ட வாரியாக தரவு உள்ளது. நாடாளுமன்ற தொகுதி வாரியான தரவு பராமரிக்கப்படவில்லை.

செலவழிக்கப்படாத தொகையை கையாள சட்டத்தின் பிரிவு 135 இல் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நிறுவனம் செலவழிக்காத தொகையை நிறுவனத்தின் சிறப்புக் கணக்கிற்கு நிதியாண்டின் இறுதியில் இருந்து 30 நாட்களுக்குள், மாற்ற வேண்டும். பின்னர் அந்த தேதியில் இருந்து அடுத்த 3 நிதியாண்டு களுக்குள் கொள்கையின்படி அதை செலவிட வேண்டும். 3 நிதியாண்டுகள் கடந்த பிறகும், செலவழிக்கப்படாத மீதமுள்ள தொகை, ஏதேனும் இருந்தால், சட்டத்தின் அட்டவணை 7ல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிதிக்கும் மாற்றப்பட வேண்டும்.



நிறுவனங்கள் சட்டம், 2013, சட்டத்தின் அட்டவணை 7 மற்றும் நிறுவனங்கள் சமூக பொறுப்புணர்வு கொள்கை விதிகள் 2014 ன் பிரிவு 135 ன் கீழ் சட்ட கட்டமைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தகுதியுள்ள நிறுவனமும் 3 அல்லது அதற்கு மேற்பட்ட இயக்குனர்களைக் கொண்ட ஒரு சிஎஸ்ஆர் குழுவை அமைக்க வேண்டும். சிஎஸ்ஆர் கொள்கையை உருவாக்கி பரிந்துரைக்கும். நிறுவனத்தின் வாரியம் அந்த குழுவின் பரிந்துரை அடிப்படையில் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் செயல்பாடுகளை திட்டமிடுகிறது.

வழங்கப்பட்ட நிதி, நோக்கங்களுக்காகவும், அங்கீகரிக்கப்பட்ட முறையிலும் பயன்படுத்தப்பட்டதா? என்பதை நிறுவனத் தின் வாரியம் சரிபார்க்க வேண்டும், மேலும் தலைமை நிதி அதிகாரி அல்லது நிதி மேலாண்மைக்கு பொறுப்பான நபர் அதற்கு சான்றளிப்பார். சிஎஸ்ஆர் குறித்த வருடாந்திர அறிக்கையை உள்ளடக்கிய வாரியத்தின் அறிக்கை, ஒரு நிறுவனத்தின் வாரியத்தால் அதன் பங்குதாரர்களுக்கு தெரிவிப்பது ஒரு முக்கியமான விஷயம் ஆகும். சிஎஸ்ஆர் நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட வேண்டும். செலவழிக்கப்படாத தொகையின் விவரங்களையும் தணிக்கையாளர்கள் குறிப்பிட வேண்டும். சிஎஸ்ஆர் விதிகளை மீறுவது குறித்து புகாரளிக்கப் படும்போதெல்லாம், அத்தகைய இணங்காத நிறுவனங்கள் மீது சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ள மகாத்மா காந்தி தேசிய

# ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட நிதி ரூ.4034 கோடியை உடனே வழங்கிடுக!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப்.4-

டெல்லியில் நடைபெற்று வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் மாநிலங்களவையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு நேரமில்லா நேரத்தில் பேசும் போது, தமிழ்நாட்டில் கிராமப்புற வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGS) மாநிலத்தில் 91 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு உயிர் நாடியாக இருந்து வருகிறது. 86 சதவீத வேலைவாய்ப்பு பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதையும்,



கிட்டத்தட்ட 29 சதவீத தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின (SC/ST) குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும், இந்த முக்கியமான திட்டத் தின் கீழ் நிலுவையில் உள்ள ஊதிய நிலுவைத் தொகையை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதால் தமிழ்நாடு கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளது.

2025 ஏப்ரல் 01 ஆம் தேதி நிலவரப்படி, கடந்த 4,5 மாதங்களாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ.4,034 கோடி நிதி ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளது. இந்தத் தாமதங்கள், இந்தத் திட்டத்தின் கீழ் சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை நம்பியுள்ள லட்சக்கணக்கான ஏழை கிராமப்புற குடும்பங் களுக்கு பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே ஒன்றிய நிதியமைச்சரை சந்தித்து, இந்த நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்கக் கோரி ஒரு மனு வழங்கியுள்ளார். முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.01.2025 அன்று பிரதமருக்கு கடிதம் எழுதி, நிலுவையில் உள்ள 2,985 கோடி ஊதிய நிலுவைத் தொகையை விடுவிக்கவும், தொழிலாளர் பட்ஜெட்டை அதிகரிக்க வேண்டும் என்ற மாநிலத்தின் கோரிக்கையை நிறைவேற்ற வும் வலியுறுத்தினார்.

நிதியை வெளியிடுவதில் ஏற்படும் இந்த தாமதம் கிராமப்புற தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப் பது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இந்த முதன்மைத் திட்டத்தை செயல்படுத்துவதையும் பாதிக்கிறது. இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு அவசர கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

எனவே, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ள MGNRGS நிலுவைத் தொகையான ரூ.4,034 கோடியை விடுவிக்க வேண்டும் என்றும், தொழிலாளர் பட்ஜெட்டை திருத்தி அதிகரிக்கவும், கிராமப்புற தொழிலாளர்களுக்கு நிலையான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும் ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பேசினார்.

---

சிறு, குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க,

# விவசாய உற்பத்தி நிறுவனங்களின் பங்களிப்பை உறுதி செய்யும் திட்டம் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஏப்.4-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் 01 ஏப்ரல் 2025 அன்று மக்களவையில், சிறு, குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், விவசாய உற்பத்தி நிறுவனங்களின் கட்டமைப்பை பெருக்கவும், அவர்களின் சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், உணவு பதனிடுதல் துறையின் மூலம் நிதியுதவி அளித்திடவும். ஏதேனும் ஒன்றிய அரசிடம் திட்டங்கள் உள்ளதா, என்றும், தமிழ்நாட்டிலுள்ள சிறு, குறு விவசாயிகள் பயன்பெற வாய்ப்புகள் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் விவசாயத்துறை இணையமைச்சர், ராம் நாத் தாககூர், அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் விவசாயத்துறை இணையமைச்சர், ராம்நாத் தாககூர் அளித்த பதில் பின்வருமாறு:

சிறு, குறு விவசாயகளின் நலனைப் பாதுகாப்பதில் 10,000க்கும் மேற்பட்ட விவசாய உற்பத்தி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், அவற்றிற்கான மேலாண்மை நிதியாக ரூபாய் 590 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும், ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூபாய் 280 கோடிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், 2094 விவசாய உற்பத்தி சங்கங்களுக்கு ரூபாய் 483 கோடிகள் அளவிற்கு கடன் உறுதியளிப்பு கணிக்கப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், விவசாய உற்பத்தி சங்கங்களை ஒரு குழுவாக அமைத்து சந்தை வாய்ப்புகளை பெருக்கவும், கணிணி தொழில் நுட்பத்தின் மூலம பயனடையவும், 216 விவசாய உற்பத்தி சங்கங்கள் மிண்ணனு சந்தையில் பங்கு பெற்று சிறு குறு விவசாயிகளுக்கு உதவி வருகின்றன என்றும், 4300க்கும் அதிகமான விவசாய உற்பத்தி சங்கங்கள் சந்தை வாய்ப்புகளை பெற்று பயனடைந்து உள்ளன என்றும், விவசாய பொருட் காட்சிகள் விவசாய மேளாக்கள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன என்றும்,

விவசாய கட்டமைப்பு நிதியம், பாரம்பரிய விவசாய வளர்ச்சி திட்டம், ஆர்கனிக் முறையிலான விவசாயம், இயந்திர மயமாக்கல், ஒருங்கிணைந்த தோட்டக்கலை திட்டம், ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் திட்டம் போன்ற திட்டங்களால் சிறு குறு விவசாயிகளின் நலனை ஒன்றிய அரசு பாதுகாத்து வருவதாகவும், 465க்கும் மேற்பட்ட விவசாய உற்பத்தி சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

---

ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரிப்பால்

# இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது உண்மையா?

## மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஏப். 4 -

கடந்த ஐந்து ஆண்டுகளில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை அதிகரித்துள்ளது குறித்தும் இதனை சமன் செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு:-

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்திய ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்ததால் அமெரிக்கா மற்றும் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தக பற்றா க்குறை அதிகரித்துள்ளது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரங்கள்?

சீனா மற்றும் அமெரிக்காவுடனான இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறையை சமநிலைப்படுத்த ஒன்றிய அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? அதன் விவரம் யாவை?

நமது நாட்டின் இறக்குமதிகளுக்கு சீனாவை அதிகமாகச் சார்ந்திருப்பதைக் குறைக்க அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி போன்ற பிற நாடுகளுடன் வரிவிதிப்பு நிபந்தனைகளற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

சீனா மற்றும் பிற நாடுகளுடனான வர்த்தக பற்றாக்குறையைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு கேள்விகளை கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை ராஜாங்க அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

கடந்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்கா மற்றும் சீனாவுடனான இந்தியாவின் சரக்கு வர்த்தக இருப்பு மதிப்புகள் பின்வருமாறு

அமெரிக்காவுடன் இந்தியாவின் வர்த்தக உபரி இருப்பு மதிப்பு (மில்லியன் அமெரிக்க டாலர்)

2019-2020 - 17,268.90
2020-2021 - 22,735.05
2021-2022 - 32,852.94
2022-2023 - 27,678.73
2023-2024 - 35,319.54

சீனாவுடன் இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை இருப்பு மதிப்பு (மில்லியன்அமெரிக்க டாலர்)

2019-2020 - 48,647.99
2020-2021 - 44,025.10
2021-2022 - 73.310.78
2022-2023 - 83,199.66
2023-2024 - 85,076.85

ஆதாரம்: DGCIS

அமெரிக்காவைப் பொறுத்தவரை, இந்தியா பொருட்கள் வர்த்தகத்தில் உபரியைப் பராமரித்து வருகிறது. இருப்பினும், குறிப்பாக சீனாவுடனான ஒட்டுமொத்த வர்த்தகப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, உள்நாட்டு விநியோகத்தை அதிகரிக்க, இறக்குமதிகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்க மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்க, இந்திய அரசு பல முயற்சிகளை எடுத்துள்ளது.

‘மேக் இன் இந்தியா’ முன்முயற்சியின் கீழ், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, இறக்குமதிகளை கணிசமாகச் சார்ந்திருக்கும் மின்னணுவியல், மருந்துகள், வீட்டு உபயோக மின் & மின்னணு பொருட்கள், தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் தயாரிப்புகள், உயர் செயல்திறன் கொண்ட சோலார் PV தொகுதிகள் போன்ற 14 முக்கியமான துறைகளில் உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டங்களை அரசாங்கம் தொடங்கியுள்ளது.



சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உட்பட தரமற்ற மற்றும் மோசமான தரமான பொருட்களைச் சரிபார்க்கவும், நுகர்வோர் ஆர்வத்தைப் பாதுகாக்கவும், தரக் கட்டுப்பாடுகள், சோதனை நெறிமுறைகள் மற்றும் கட்டாயச் சான்றிதழ் ஆகியவற்றிற்கான கடுமையான தரநிலைகள் மற்றும் நடவ டிக்கைகளை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும் ஒற்றை விநியோக ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க, மாற்று சப்ளையர்களை ஆராயவும், அவற்றின் விநியோகச் சங்கிலிகளை பல்வகைப்படுத்தவும் இந்திய வணிக நிறுவனங்களை ஒன்றிய அரசு ஊக்குவிக்கிறது.

இறக்குமதிகளின் அதிகரிப்பை ஒன்றிய அரசு தொடர்ந்து கண்காணித்து, அதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கிறது.

மேலும், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு எதிராக வர்த்தக தீர்வு நடவடிக்கைகளை பரிந்துரைக்க வர்த்தக தீர்வுகள் இயக்குநரகம் (DGTR) அதிகாரம் பெற்றுள்ளது.

ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2024 வரை சீனாவிற்கு எதிராக 129 வர்த்தக தீர்வு வழக்குகளை DGTR தொடங்கியுள்ளது.

தற்போது, இந்தியா-EU மற்றும் இந்தியா UK FTAக்களை முறையே முடிக்க ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் இங்கிலாந்து (UK) ஆகிய இரு நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகள் நியாயமான, சமமான, பரஸ்பர நன்மை பயக்கும் மற்றும் வணிக ரீதியாக அர்த்தமுள்ள ஒப்பந்தங்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஜெர்மனி உறுப்பினராக உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுத்தவரை, ஜூன் 2022 இல் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கியதிலிருந்து மார்ச் 2025 வரை பத்து சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் 13 ஜனவரி 2022 அன்று தொடங்கப்பட்ட இந்தியா-UK FTAக்கான பேச்சுவார்த்தைகள், இந்தியா மற்றும் UK இரண்டிலும் தேர்தல்கள் நடந்ததால், 14வது சுற்றின் போது மே 2022 இல் இடைநிறுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து, நவம்பர் 2024 இல் ரியோ டி ஜெனிரோவில் நடந்த G-20 உச்சிமாநாட்டின் போது இரு நாட்டு பிரதமர்களும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க ஒப்புக்கொண்டனர்.

ஐக்கிய இராச்சியத்தின் வணிகம் மற்றும் வர்த்தகத் துறையின் வெளியுறவுச் செயலாளர், ஆர்.டி.ஹான் ஜோனாதன் ரெனால்ட்ஸ், பிப்ரவரி 24-25, 2025 அன்று புது தில்லிக்கு விஜயம் செய்தார், மேலும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயலுடன் இணைந்து, பிப்ரவரி 24, 2025 அன்று பேச்சுவார்த்தைகளை முறையாக மீண்டும் தொடங்குவதாக அறிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

---

சர்வதேசச் சந்தைகளில் இந்தியாவின் கைத்தறி மற்றும்

# பாரம்பரிய ஜவுளிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஏப். 4 -

சர்வதேச சந்தையில் நமது கைத்தறி மற்றும் பாரம்பரிய ஜவுளிகளை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் மொத்த ஏற்றுமதியில் பருத்தி, செயற்கை துணிகள், பட்டு, கம்பளி மற்றும் தொழில்நுட்ப ஜவுளி போன்ற பல்வேறு பிரிவு களின் பங்கு;

(ஆ) ஜவுளி ஏற்றுமதியில் இந்தியாவின் உலகளாவிய போட்டித்தன்மையை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்;

(இ) பல்வேறு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள்) மற்றும் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்கள் (PTAக்கள்) இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் ஏற்படுத்திய தாக்கத்தை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? அப்படியானால், அத்தகைய மதிப்பீடுகளின் விவரங்கள், இந்திய ஜவுளி ஏற்றுமதியைப் பாதிக்கும் வரி மற்றும் வரி அல்லாத தடைகள் குறித்து தெரிவிக்கவும்,



(ஈ) சர்வதேச சந்தைகளில் கைத்தறி மற்றும் பாரம்பரிய ஜவுளிகளை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்;

(இ) பல்வேறு அரசாங்க முயற்சிகளின் கீழ் ஆதரிக்கப்படும் இந்திய கைத்தறி மற்றும் கைவினை ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை;

(எஃப்) இந்திய ஜவுளிப் பொருட்களுக்கான புவியியல் குறியீடு (GI) குறிச்சொல்லின் நிலை மற்றும் ஏற்றுமதியில் அதன் தாக்கம்; மற்றும்

(g) டிஜிட்டல் மற்றும் மின் வணிக தளங்கள் மூலம் இந்திய கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களை உலகளாவிய வாங்குபவர்களுடன் இணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் என்ன? என்பன உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய ஜவுளித் துறை இணை அமைச்சர் பபித்ரா மார்க்கரிட்டா விளக்க மளித்துள்ளார்.



கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவுறுத்தல் படி கோடை காலத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகரம் 27 வது வார்டு தி.மு.க விஜயபாஸ்கர் ஏற்பாட்டில் நீர், மோர், தர்பூசணி, பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீ ராம் கலந்து கொண்டு திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்,மோர், தர்பூசணி மற்றும் அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாணிக்கம், புவனேஸ்வரி வேல்முருகன், ராமச்சந்திரன், அருண்குமார், ஆவின் செல்வமணி, பைத்தூர் ரவி, முத்து மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.